# 4. நலம் விரும்புவோம்

## அலகு அறிமுகம்

இன்றைய அவசர உலகில் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் செய்யக்கூட நமக்கு நேரமில்லை. எங்களை யாராவது கவனிப்பார்களா, எங்களோடு யாராவது பேசுவார்களா என்று ஏங்குபவர்கள் நம்மிடையே உண்டு. அப்படிப்பட்டவர்களை நாம் கண்டறிந்து அவர்களுக்கு உதவ வேண்டும். படிக்க வேண்டிய வயதில் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும். குழந்தைகள் இலவசக் கல்வி பெறுவது அவர்களது அடிப்படை உரிமையாகும். மாணவர்கள் பள்ளிக்குச் சென்று நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொண்டு இச்சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். நமது வீட்டை, பள்ளியை, நாட்டை நேசிப்பது மாணவர்களின் கடமை என்றும் உணர்த்தும் விதமாக இவ்வலகு அமைந்துள்ளது.

கல்வி கற்பித்தல் என்பது மிகப்பெரிய சேவை. குறிப்பாகச் சிறப்புக் குழந்தைகளுக்குக் கற்பிப்பது தெய்வீகமானது. ஆசிரியப்பணி செய்பவர்களுக்கு நம்பிக்கையும் பொறுமையும் எல்லாக் குழந்தைகளையும் சமமாக நடத்தும் பண்பும் தேவை. சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்களைப் பற்றி அறிந்துகொள்ள பட்டாம்பூச்சி என்னும் களப்பயணம் கொடுக்கப்பட்டுள்ளது. கண்பார்வை இன்றி, கேட்கும் திறனை இழந்து வாய்பேசா ஓர் மாற்றுத்திறனாளி, தொடு உணர்ச்சியால் கல்வி கற்று, 34 புத்தகங்கள் எழுதியுள்ளார். சாதனை நாயகி ஹெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாறு, சிறப்புக் கவனம் பெறும் குழந்தைகள் கூட சமூகத்தில் மாற்றத்தை உருவாக்க இயலும் என்பதை உணர்த்துகிறது.

கல்வியின் முக்கியத்துவம், பள்ளி செல்ல வேண்டிய காரணம், இலவசக் கட்டாயக் கல்வி போன்ற கருத்துக்களைச் சின்னானும் சிட்டுக்குருவியும் என்னும் எளிய குறுங்கதை உணர்த்துகிறது.

மாணவர்கள் தங்களது கடமைகளையும் உரிமைகளையும் அறிந்து கொள்ள உதவும் வகையில் கடமைகளும் உரிமைகளும் என்னும் அலகு இலக்கிய மன்றத்தில் நடைபெறும் சொற்பொழிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வலகு வாயிலாகக் களப்பயண அனுபவங்களைக் கடிதமாக எழுதுதல், வினாநிரல், பழமொழிகள் சேகரித்தல், விளக்கக்குறிப்பு, கலந்துரையாடல் குறிப்பு எழுதுதல், பத்திரிகைச் செய்தி தயாரித்தல் சொற்பொழிவு குறிப்பு தயாரித்தல் போன்ற கற்றல் அடைவுகளை மாணவர்கள் பெற வேண்டும். அதற்கேற்ப இவ்வலகைத் திட்டமிடுவீர்களல்லவா?

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
20 பிரிவேளைகள்.

# பாடத்திட்ட வலைச் சட்டம்

| கருத்துகள்/ திறன்கள் மொழி வெளியீட்டு வடிவங்கள் | செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
| --- | --- | --- |
| ➢ சுருக்கமாகவும் தெளிவாகவும் நடைபெறும் கருத்துப் பரிமாற்றமே உரையாடல்<br>➢ சிறப்புக் குழந்தைகள் மேல் தனிக்கவனம் செலுத்தல் வேண்டும்<br>➢ சொற்கள் சேரும் போது வாக்கியங்கள் உருவாகின்றன.<br>➢ கடிதங்கள், பலவகைப் பயண அனுபவங்களைக் கடிதம் வாயிலாகத் தெரிவிக்கலாம்<br>➢ ஊனம் சாதனைக்குத் தடையல்ல<br>➢ வாழ்க்கை வரலாறு அறிதல்<br>➢ கதையின் கருத்து, உள்ளடக்கம், பாவனை, குரல் ஏற்றத்தாழ்வுடன் வாசிப்பு தொடங்க வேண்டும்<br>➢ குழந்தைகளுக்கு கடமையும் உரிமையும் உண்டு. அவை பாதுகாக்கப்படவேண்டும்.<br>➢ பத்திரிகைச் செய்தி தயாரித்தல்<br>➢ சொற்பொழிவுக் குறிப்புகள்<br>➢ பாராட்டுக் கடிதம் எழுதுதல் | ➢ வாக்கியங்கள் எழுதுதல்<br>➢ கேள்விபதில்<br>➢ அனுபவக் கடிதம் எழுதுதல்<br>➢ பழமொழிகளைத் திரட்டுதல்<br>➢ பத்திரிக்கைச் செய்தி எழுதுதல்<br>➢ சொற்பொழிவுக் குறிப்புத் தயாரித்தல்.<br>➢ பாராட்டுக் கடிதம் | ➢ சொற்கள் சேர்ந்து வரும் வாக்கியங்கள் எழுதுகின்றனர்.<br>➢ தங்கள் களப்பயண. அனுபவங்களைக் கடிதமாக எழுதுகின்றனர் /சொல்லுகின்றனர்.<br>➢ வினாநிரல் தயாரிக்கின்றனர்.<br>➢ கதையின் கருத்தோடு தொடர்புடைய பழமொழிகள் சேகரிக்கின்றனர். வெளியிடுகின்றனர்.<br>➢ கருத்து விளக்கக் குறிப்பு எழுதுகின்றனர்.<br>➢ கலந்துரையாடல் குறிப்பு எழுதுகின்றனர்.<br>➢ பள்ளி இலக்கிய மன்ற விழாவைப் பத்திரிகைக்கு அளிக்கப் பத்திரிகைச் செய்தி ஆக்குகின்றனர்.<br>➢ குடியரசு தினவிழாவில் உரையாற்றுவதற்காகச் சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குகின்றனர்.<br>➢ கடிதம் எழுதுகின்றனர். |

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- ☞ சொற்கள் சேர்ந்து வரும் வாக்கியங்கள் எழுதுகின்றனர்.
- ☞ தங்கள் களப்பயண அனுபவங்களைக் கடிதமாக எழுதுகின்றனர் சொல்லுகின்றனர்.
- ☞ வினாநிரல் தயாரிக்கின்றனர்.
- ☞ கதையின் கருத்தோடு தொடர்புடைய பழமொழிகள் சேகரிக்கின்றனர். வெளியிடுகின்றனர்.
- ☞ கருத்து விளக்கக் குறிப்பு எழுதுகின்றனர்.
- ☞ கலந்துரையாடல் குறிப்பு எழுதுகின்றனர்.
- ☞ பள்ளி இலக்கிய மன்ற விழாவைப் பத்திரிகைக்கு அளிக்கப் பத்திரிகைச் செய்தி ஆக்குகின்றனர்.
- ☞ குடியரசு தினவிழாவில் உரையாற்றுவதற்காகச் சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குகின்றனர்.
- ☞ கடிதம் எழுதுகின்றனர்.

**கற்றல் துணைக் கருவிகள்**

- ➲ பத்திரிகைச் செய்திகளின் பல்வேறு மாதிரிகள்
- ➲ பழமொழிப் புத்தகங்கள்
- ➲ Chart-ல் எழுதிய கடிதம்
- ➲ பொன் மொழிகள்



## ஆயத்தச் செயல்பாடு

**பாடப்பகுதிக்குள் நுழையும் முன் ஆசிரியர் ஒரு பாடலை அறிமுகம் செய்கிறார்.**

பார்வை இல்லா மானிடரை
குருடர் என்போரே சிந்திப்பீர்
நல்லதைப் பாராமல் போய்விட்டால்
பார்வை இருந்தும் என்ன பயன்?

காலில் ஊனம் ஆனவரை
நொண்டி என்போரே சிந்திப்பீர்
நல்வழி நடக்காமல் இருந்திட்டால்
கால்கள் இருந்தும் என்ன பயன்?

ஒருகை சூம்பிப் போனவரை
முடவன் என்போரே சிந்திப்பீர்
குத்தவும் கொல்லவும் திரிந்திட்டால்
கைகள் இருந்தும் என்ன பயன்?

நன்றாய் கைகால் இருக்கையிலே
நல்லதே செய்வோம் மாந்தருக்கே
உடலும் பலமும் நிறைந்தோரே
நன்மைகள் செய்ய நாடிடுவீர்!

பாடலைப் பாடி மாணவர்களிடம் சில கேள்விகளை ஆசிரியர் கேட்டல்.

- மாற்றுத் திறனாளிகளுக்கு நீங்கள் உதவியுள்ளீர்களா?

  (சிலரது அனுபவங்களைக் கூற வைத்தல்)

சமூகத்தில் நம்மைப் போலவே மாற்றுத் திறனாளிகளும் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்னும் கருத்தை உணர்ந்து பாடப்பகுதிக்குள் நுழைதல்.

## பட்டாம்பூச்சிகள்

### செயல்பாடுகள்

- ☐ பின்வரும் சொற்கள் இடம்பெறும் வாக்கியங்களைப் பாடத்திலிருந்து எடுத்து எழுதக் கூறுங்கள்

| | |
|---|---|
| கூர்ந்து | படிக்கும் |
| வேறுபாடு | வியப்பு |
| வேலை | எல்லாரும் |

மாணவர்கள் சுயமாக வாசித்துப் பழகவும், தான் கற்றுக்கொண்ட சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தவும் இவ்வகைச் செயல்பாடுகள் உதவுகின்றன. சில வேளைகளில் இவ்வகைச் சொற்களுக்குப் பதிலாக இதே பொருள்தருகின்ற வேறுசொற்களைப் பயன்படுத்தும் திறன்களைக் குழந்தைகள் பெறும்வகை யில் இச்செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. மட்டுமன்றி, பாடப்பகுதி செயல்பாடுகளில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வாக்கியத்தில் அமைத்து, புதிய வாக்கியங்கள் உருவாக்க மாணவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

மாணவர்கள் கண்டறிந்த சொற்கள் இடம்பெறும் வாக்கியத்தை நோட்டுப் புத்தகத்தில் எழுதச் செய்யலாம்.

- ☐ களப்பயண அனுபவத்தை நண்பனுக்குக் கடிதம் வாயிலாகத் தெரியப்படுத்தவும்.

(ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வேறொரு வெளியீட்டு வடிவமாக மாற்றுதல்)

கடிதம் என்ற மொழி வெளியீட்டு வடிவத்தைத் தெரிந்துகொள்வதுடன், தன் பயண அனுபவத்தைப் பிறர் எழுத்து வடிவத்தில் தெரிந்துகொள்ளச் செய்தல்.

கடிதம் எழுதுதல் செயல்பாட்டை மாணவர்களைக் குழுவாகப் பிரித்து அளிக்கலாம். மாணவர்கள் தாங்கள் எழுதிய கடிதத்தை ஆசிரியர் காண்பிக் கும் மாதிரியைப் பார்த்துச் சுய மதிப்பீடு செய்யட்டும். மேம்படுத்தவும் இயலும் அல்லவா? மேம்படுத்திய கடிதத்தை ஆசிரியர் மதிப்பீடு செய்யலாம்.

**அம்பநாடு, கொல்லம்,**
**01-10-2014**

ஆருயிர் நண்பன் ராஜா,

உனது அன்பை என்றும் மறவா கோகுல் எழுதும் மடல். நானும், எனது வீட்டில் அனைவரும் நலம். நீயும் வீட்டாரும் நலமா?

கடந்த வாரம் நாங்கள் எங்களது பள்ளியிருந்து, திருவனந்தபுரம் சிறப்புப் பள்ளிக்குச் சென்றிருந்தோம். அங்கே நாங்கள் கண்ட காட்சி ஏழைகளிடமும், மாற்றுத் திறனாளிகளிடமும் அன்பு செலுத்தத் தூண்டு வதாக அமைந்தது.

நாங்கள் அங்கே கண்ட மாணவர்கள் மூளைத்திறன் பாதிப்பு, உடல் விறைப்பு, மூளைத்திறன் குறைவு, கற்றல் குறைபாடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு யோகா, ஏணியில் ஏறுவது, பிளாஸ்டிக் வடிவங்களை அதற்குரியச் சட்டங்களில் பொருத்துவது போன்ற பயிற்சிகள் பள்ளியிலேயே தரப்படுகின்றன.

இப்பள்ளியின் முதல்வரும், ஆசிரியர்களும் மிக அன்பானவர்கள்; பொறுமையானவர்கள். அவர்கள் இக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதை தெய்வீகப் பணியாகக் கருதுகிறார்கள். இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளும் நம்மைப்போலவே சமூகத்தில் மதிக்கப்படவேண்டியவர்களே. நாமும் மாற்றுத் திறனாளிகளை மதிக்க வேண்டும்.

தற்போது எழுதுவதற்கு வேறு விசேஷங்கள் ஒன்று மில்லை.

இப்படிக்கு,
உன்னுயிர்த் தோழன்
கோகுல்

**உறையின் மேல் முகவரி**

பெறுநர்
செல்வன். பா. ராஜா
த/பெ திரு. க. பாரிவேந்தன்
7.212, அப்துல் கலாம் தெரு,
குட்டிக்கானம்,
பீர்மேடு அஞ்சல் - 685 531.
இடுக்கி மாவட்டம்.



**கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டியவை . . .**

- *வலப்பக்கம் இடம், நாள் போன்றவை எழுத வேண்டும்.*
- *ஆருயிர் நண்பா, அன்புள்ள . . . எனும் மதிப்புமிக்க விளிகளைப் பயன்படுத்துதல்*
- *தெளிவான கருத்து*
- *சுருங்கக் கூறுதல்*
- *கடிதத்தின் முடிவில் அன்புள்ள, அன்புடன் போன்ற சொற்களைப் பயன்படுத்துதல்*
- *உறையின் மேல் பகுதியில் பெறுநர் முகவரியும், பின் பகுதியில் அனுப்புநர் முகவரியும் எழுத வேண்டும்.*

| |
|---|
| தொடர் செயல்பாடான பள்ளியிலிருந்து கல்விச் சுற்றுலா சென்ற அனுபவத்தைத் தனது நண்பனுக்குக் கடிதமாக எழுதச் செய்யலாம் |

## சாதனை நாயகி ஹெலன் கெல்லர்

### செயல்பாடுகள்

- ☼ ஹெலனின் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுங்கள்?
- ☼ ஆனி சலிவான் ஹெலனுக்கு எவ்வாறெல்லாம் உதவினார்?
- ☼ ஹெலனை சாதனை நாயகி என்று ஏன் சொல்லுகிறார்கள்?

மாற்றுத்திறனாளிகளான குழந்தைகளுக்கு உத்வேகமூட்டும் முயற்சியாக ஹெலன் கெல்லரின் வாழ்க்கை வரலாறு சாதனை நாயகி எனும் தலைப்பில் இந்த பாடப்பகுதியில் தரப்பட்டுள்ளது.

அவர்களும் இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள், இச் சமூகத்தில் அவர்களாலும் மாற்றங்களை உருவாக்க இயலும் என்பதைப் பிற மாணவர்களும் அறிந்து கொள்ளவே இப்பாடப்பகுதி கொடுக்கப்பட்டுள்ளது. ஹெலனைப் பற்றி எந்த

அளவுக்குப் பாடத்தை வாசித்து மாணவர்கள் அறிந்துகொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவே 3 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதனை வகுப்பறையில் சொல்லவும், தங்களது பாடக்குறிப்பேட்டில் எழுதவும் மாணவர்களை உற்சாகப்படுத்தவேண்டும்.

மாணவர்கள் பாடப்பகுதியைத் திரும்பத்திரும்ப வாசிக்கச் செய்து, கேள்விகளுக்குப் பதிலைக் கண்டறியச் செய்தல்

பாடப்பகுதியிலிருந்து விடைகள் வருமாறு கேள்விகள் உருவாக்கச் செய்தல்

## சின்னானும் சிட்டுக்குருவியும்

குழுவாகப் பிரிந்துக் கதையை வாசித்து, வகுப்பில் குழுவுக்கு ஒருவராகக் கதை சொல்லுதல்

**கதை கூறும்போது கவனிக்க வேண்டியவை**



- *கதை சொல்லும் நேர்த்தி*
- *கருத்துத் தொகுப்பு*
- *உச்சரிப்பு*
- *சொந்த நடையில் சொல்லுதல்*
- *சில அலங்கார வார்த்தைகள் சேர்த்தல்*
- *முகபாவனை*

சிறப்பாகக் கூறியவர்க்குப் பாராட்டும் வழங்கலாமே!

### வாழ்க்கையோடு தொடர்புடைய பழமொழிகள் திரட்டுதல்

**மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்ட மாதிரி** என்ற பழமொழியைப்போல வாழ்க்கையுடன் தொடர்புடைய பழமொழிகளைத் திரட்டி வகுப்பில் வெளியிடவும். சிலர் தமது பேச்சுக்களிடையே பழமொழி களை உபயோகிப்பர். பழமொழிகள் வாழ்க்கையின் அனுபவமொழிகள் என்று கூறலாம். மாணவர்களை அவர்களது தாத்தா, பாட்டி மற்றும் முதியோர் களிடமிருந்து பழமொழிகளைக் கேட்டு எழுதி வரச்சொல்லலாம். பள்ளி நூலகத் திலுள்ள பழமொழிப் புத்தகங்கள் மாணவர்களை உபயோகிக்கச் செய்யவும்.

- ☐ ஆனைக்கும் அடிசறுக்கும்
- ☐ பழகப் பழகப் பாலும் புளிக்கும்
- ☐ அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு
- ☐ கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தானாம்!
- ☐ ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம்
- ☐ தங்க ஊசி என்றால் கண்ணில் குத்தலாமா?
- ☐ கோளாறுக்காரன் சூத்தக் கத்திரிக்காய வாங்கினானாம்

மாணவர்கள் சேகரித்த பழமொழிகளை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

சின்னானுக்குத் துணிகளை இரண்டாவது முறை வெளுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை - இதில் மறைந்துள்ள கருத்தை விளக்குங்கள் என மாணவர்களிடம் கேட்கலாம்.

பாடப்புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசித்து அதில் மறைந்துள்ள கருத்துகளைக் குழந்தைகள் கண்டறிய வைக்கவும். குழந்தைகள் தனியாக வாசிக்கும்போது வாசிப்பு ஆர்வம் உண்டாகிறது. இது போன்று வேறு சில கேள்விகளும் கேட்கலாம்.

## கடமைகளும் உரிமைகளும்

### செயல்பாடுகள்

மாணவி நித்யா குழந்தைகளின் கடமைகள் என்ற தலைப்பில் கூறிய கருத்து கள் எவை? குழுவில் கலந்துரையாடிக் குறிப்பேட்டில் எழுதுங்கள்.

மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து குழந்தைகளின் கடமைகள் என் னென்ன என்பதைக் கலந்தரையாடும் வண்ணம் சில வினாக்களை ஆசிரியர் எழுப்பவும்.

- ☼ நாம் இருக்கும் இடத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும்?
- ☼ நமது பள்ளிக்கூடச் சூழல் எப்படி இருக்கவேண்டும்?

எல்லா மாணவர்களையும் பங்குபெறச் செய்யவேண்டும். கருத்துகளை எழுதி முடித்தபின் அதனை மாணவரது குறிப்பேட்டில் எழுதச் செய்யுங்கள்.

### பத்திரிக்கைச் செய்தி

பள்ளி இலக்கிய மன்ற விழா நிகழ்வுகள் அடுத்தநாள் பத்திரிக்கையில் எவ்வாறு வந்திருக்கும்? எழுதிப்பார்க்கட்டும்.

## பள்ளி இலக்கிய மன்ற விழா

மாணவர்களைக் குழுவாகப் பிரித்து இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளை கலந்துரையாடச் செய்யலாம். நிகழ்ச்சிகைளைக் கோர்வையாக்கிக் கலந்துரையாடுவது நலம். கலந்துரையாடிய கருத்துகளைக் கூறச் செய்து பத்திரிகைச் செய்தியின் மாதிரியைக் காண்பித்து என்னென்ன இடம்பெறவேண்டுமென்பதை மாணவர்களே தீர்மானித்துப் பத்திரிகைச் செய்தி எழுதட்டும். ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

### அம்பநாடு பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா

**கொல்லம் அக் 11, 2014** நேற்று மாலை அம்பநாடு அரசு துவக்கப் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. இவ்விழாவில் நடைபெற்ற கருத் தரங்கத்தைப் பள்ளித் தலைமை யாசிரியர் தலைமையேற்று நடத்தினார். குழந்தைகளின் கடமைகள் என்னும் தலைப் பில் நித்யாவும் குழந்தைகளின் உரிமைகள் என்னும் தலைப்பில் சலீமும் பேசினார்கள். மாணவர் தலைவர் மனோ நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். ஜஸ்டின் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கருத்த ரங்கம் இனிதே நிறைவுற் றது.

**பத்திரிக்கைச் செய்தி உருவாக்கும்போது நினைவில் கொள்ள வேண்டியவை**



- *தலைப்புச் செய்தி - பெரிய எழுத்துகளில் அமைய வேண்டும்*
- *செய்தி வெளியாகும் இடம், நாள் போன்றவை குறிப்பிட வேண்டும்.*
- *தகவல்கள் உண்மையானதுதான் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.*
- *மிகைப்படுத்துதல் வேண்டாம்*
- *நாளிதழ்களை வாசிக்கவும், செய்திகள் உருவாக்கவும் ஊக்கமளிக்க வேண்டும்*

தொடர் செயல்பாடாகப் பள்ளியில் நடைபெற்ற கலைவிழா நிகழ்ச்சிகளைப் பத்திரிக்கைச் செய்தியாக எழுதச் செய்யலாம்



**மதிப்பீடு**

- தெளிவான கருத்துவரிசை
- சிறந்த மொழிநடை, கவர்ச்சி
- பொருத்தமான தலைப்பு

## பாராட்டுக் கடிதம்

குழந்தைகளிடம் பிறரை எவ்வாறெல்லாம் பாராட்டுவீர்கள் என்று கேட்கலாம். சில வாக்கியங்களை மாணவர்கள் கூறுவார்கள். பரிசு அளித்தல், வாழ்த்துக் கூறுதல், கடிதம் எழுதுதல் எனக்கூறி உங்களிடமுள்ள பாராட்டுக் கடிதத்தை அறிமுகப்படுத்துங்கள். (முன்னர் அளித்த கடிதம் எழுதுதல் செயல்பாட்டின் வழிமுறைகளை இதற்கும் பயன்படுத்தலாம்)

குளத்துப்புழை,

13.10.2014

அன்புள்ள நண்பன் சலீமுக்கு,

நலமா? இவ்வருட இலக்கிய மன்றத் துவக்க விழாவில் குழந்தைகளின் உரிமைகள் என்னும் தலைப்பில் நீ எடுத்துக் கூறிய கருத்துகளை அறிந்து மனம் மகிழ்ந்து உன்னைப் பாராட்டுகிறேன்.

உன் பள்ளியிலுள்ள அனைத்து மாணவர்களும் தங்களது உரிமை களைப் புரிந்து கொண்டிருப்பார்கள். குழந்தைகள் தங்களது உரிமைகளைப் புரிந்துகொண்டு, அதன்படி நடப்பதற்கு நீ ஒரு தூண்டுகோலாய் இருப்பாய் என்று நான் நம்புகிறேன்.

மேலும், இதுபோன்ற நிகழ்ச்சிகளில் நீ கலந்துகொண்டு பரிசுகள் பெற்று பெற்றோருக்கும், உனது பள்ளிக்கும் பெருமை தேடித் தருமாறு உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு
உன் உயிர்த்தோழன்
**துரை**

**பெறுநர் முகவரி**
செல்வன். ச. சலீம்,
வகுப்பு 5 அ பிரிவு
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
அம்பநாடு,
கொல்லம் மாவட்டம்.



## மதிப்பீடு

- பொருத்தமான அமைப்பு (யார், யாருக்கு, எப்போது, எங்கிருந்து அனுபப்டுகிறது என்பது பற்றிய உள்ளடக்கம்)
- கருத்து உருவாக்கம்
- உள்ளுணர்வு (கற்பனை, உணர்வுகள்) வெளிப்படும் மொழி

☐ பள்ளியில் நடைபெறும் குடியரசு தினவிழாவில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவுக் குறிப்புகள் தயாராக்குங்கள். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்கக் கூறுங்கள்.

**சொற்பொழிவுக் குறிப்புகள் தயாரிக்கும் முன்**



☐ பேசவிருக்கும் தலைப்பு பற்றிய கருத்துக்களைத் தொகுத்தல். குறிப்புகளை வரிசைப்படுத்துதல்.

☐ பொருத்தமான சான்றுகள் சேர்த்தல்

☐ மேடையேறியதும் : பேசவிருக்கும் தலைப்பைக் கூறுதல்

☐ அனைவர் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் முன்னுரை வழங்குதல்

☐ கருத்துக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல்

☐ எடுத்துக்கொண்ட பொருளை நிறுவுதல்

☐ கேட்பவர்கள் ஏற்கும் வண்ணம் உரையை முடித்தல்

குழந்தைகள் சொற்பொழிவாற்ற ஆசிரியர்கள் வகுப்பறையிலேயே வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுங்கள். அவர்களது சொற்பொழிவுகளை மேம் படுத்துங்கள்.

> தரநிர்ணய குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யவேண்டும்.

- நான் கற்றுக்கொண்டவை எனும் தலைப்பில் மாணவர்கள் தங்களைச் சுய மதிப்பீடு செய்யும் பகுதி அலகின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் நான் இவ்வழியாகக் கடந்துசென்றுள்ளேனா என்று சுய பரிசோதனை நடத்திக்கொண்ட பின்னர், மாணவர்களைப் பூர்த்தி செய்யச் சொல்லுங்கள்.

### படைப்புத் தொகுப்பு

- பழமொழிகளைத் திரட்டுதல்.
- பத்திரிக்கைச் செய்தி தயாரித்தல்
- பாராட்டுக் கடிதம் எழுதுதல்.

## அலகு மதிப்பீடு (மாதிரி)

1. அரசு நடுநிலைப் பள்ளி வாகுவரையிலிருந்து மாணவர்கள் கல்விச் சுற்றுலாவிற்காகத் தென்மலைக்குச் சென்றனர். அங்குக் கண்ட காட்சி களையும் பயணஅனுபவங்களையும் சரத் தனது நண்பன் மனோவிற்கு கடிதமாக எழுதினான். அவன் எழுதியதைப் போன்று நீங்களும் உங்கள் பயண அனுபவத்தை நண்பனுக்குக் கடிதமாக எழுதுங்கள்.

2. தண்ணீரில் தத்தளித்த 4 மாணவர்களை ரமணன் என்ற 5ஆம் வகுப்பு மாணவன் காப்பாற்றினான் என்ற செய்தியைப் பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசித்தனர். ரமணனைப் பாராட்டி ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.

3. நமது பள்ளியில் நடைபெற்ற கிருஸ்துமஸ் விழா நிகழ்ச்சியைப் பத்தி ரிக்கைக்கு அளிக்க வேண்டும். அதற்காகப் பத்திரிக்கைச் செய்தியின் ஒரு மாதிரி தயாரியுங்கள்.

4. குடியரசு தினவிழாவில் தேசத்தலைவர்களைப் பற்றி உரையாற்று வதற்காகச் சொற்பொழிவுக் குறிப்பு தயாரியுங்கள்.

5. சிறுவர்களுக்கான கதைப்புத்தகங்கள் கொடுத்து மாணவர்கள் வாசித்த கதைகளை அவர்களின் சொந்த நடையில் கூறச் செய்தல்.